# Comeback கொடுப்பதில் Specialist-ஆன நாம்,

# திரும்ப வருவோம்; வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுப்போம்!



## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஆக. 24 -**

**“Comeback கொடுப்பதில் Specialistஆன நாம், திரும்ப வருவோம்; வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுப்போம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

**அடுத்த நூறு ஆண்டுகளுக்குக் கழகத்தின் பயணம் தொடர்வதற்கான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது செயற்குழு!**

**Bore அடிக்கிறது என அரசியலுக்கு வந்தவர்கள் அல்ல நாம்; போராட வந்தவர்கள்!**

**Comeback கொடுப்பதில் Specialist-ஆன நாம், திரும்ப வருவோம்; வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுப்போம்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# புது ரத்தம் பாய்ச்சிட இளம் தலைமுறையினருக்கு வாய்ப்பு!

### தலைமைச் செயற்குழுக் கூட்டத் தீர்மானங்கள்!... முதல் பக்கத் தொடர்ச்சி

உருவாக்கப்படும் வட்டக் கழகங்கள் சராசரியாக பத்தாயிரம் வாக்குகள் கொண்டதாக இருக்க வேண்டும். மற்ற மாநகரங்களில் சராசரியாக ஐந்தாயிரம் வாக்குகள் கொண்டதாக அமைய வேண்டும். அதுமட்டுமின்றி, மாநகர - நகர - பேரூர் உள்பட்ட கழகங்களுக்கு வட்டக் கழகச் செயலாளரின் அதிகபட்ச வயது

50 என நிர்ணயிக்கப்படுகிறது. மேலும், ஒருவர் அப்பொறுப்பை அதிகபட்சமாக இரண்டு முறை மட்டுமே வகிக்க முடியும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

**பேரூர்க் கழகச் செயலாளர்கள்!**

**தீர்மானம் : 4**

கிராமபுறங்களுக்கும் நகர்ப்புறங்களுக்கும் இடைப்பட்ட அமைப்பு பேரூராட்சிகள். அந்தப் பேரூர்க் கழகங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் பேரூர்க் கழகச் செயலாளரின் அதிகபட்ச வயது 60 என நிர்ணயிக்கப்படுகிறது. ஒருவர் பேரூர்க் கழகச் செயலாளராக அதிகபட்சமாக, இரண்டு முறை மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

**பகுதிக் கழகச் செயலாளர்கள்!**

**தீர்மானம் : 5**

மாநகரங்களில் கழகத்தின் செயல்பாடுகளுக்கு அச்சாணியாக விளங்குவது பகுதிக் கழகங்கள். சென்னை மாநகராட்சியில் இனி அமையும் பகுதிக் கழகங்கள் 40 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்டதாகவும், மற்ற மாநகரங்களுக்குச் சராசரியாக 30 ஆயிரம் வாக்காளர்கள் கொண்ட பகுதி கழகங்களாகவும் அமைய வேண்டும். அப்படி உருவாக்கப்படும் பகுதிக் கழகங்களுக்கான செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் அதிகபட்ச வயது 60 என்றும், அவர்கள் அதிகபட்சமாக இரு முறை அப்பொறுப்பில் பணியாற்ற முடியும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

**நகரக் கழகச் செயலாளர்கள்!**

**தீர்மானம் : 6**

இந்தியாவிலேயே வேகமாக நகரமயமாகிவரும் மாநிலம் தமிழ்நாடு. நிர்வாக வசதிக்காக மக்கள்தொகை அடிப்படையில் நகரக் கழகங்களைப் பிரிப்பது இன்றியமையாததாகிறது. அதன் அடிப்படையில், சராசரியாக 40 ஆயிரம் வாக்காளர்களை உள்ளடக்கிய ஒரு நகரக் கழகம் உருவாக்கப்பட வேண்டும். நகரக் கழகங்களின் அமைப்பை வலுப்படுத்தும் வகையில், நகரச் செயலாளரின் அதிகபட்ச வயது 60 என்று நிர்ணயிக்கப்படுவதுடன், நகரச் செயலாளராக ஒருவர் இரு முறை மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**ஒன்றியக் கழகச் செயலாளர்கள்!**

**தீர்மானம் : 7**

மாவட்டக் கழகங்கள் எனும் வலிமைமிக்க அமைப்புகளைத் தாங்கி நிற்கும் தூணாக விளங்குபவை ஒன்றியக் கழகங்கள். அவற்றை மேலும் வலிமை பொருந்திய அமைப்பாக மாற்றிட சராசரியாக 30 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு ஒன்றியக் கழகம் என்ற அடிப்படையில் ஒன்றிய அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஒன்றியக் கழகச் செயலாளரின் அதிகபட்ச வயது 60 என நிர்ணயிக்கப்படுவதுடன், ஒருவர் ஒன்றியக் கழகச் செயலாளராக அதிகபட்சமாக இரண்டு முறை மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியத்தை அடிப்படை அலகாகக் கொண்டு கழக ஒன்றியங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும். எந்தச் சூழலிலும் ஒரு ஊராட்சி இரண்டாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு கழக ஒன்றியங்களுடன் இணைக்கப்படக் கூடாது.

ஒவ்வொரு கழக ஒன்றியமும் ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் அமைந்திருக்க வேண்டும். ஒரு கழக ஒன்றியம் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்குள் இடம்பெறும் நிலை தொடரக் கூடாது என்று தீர்மானிக்கப்படுகிறது.

**மாவட்டக் கழகங்கள் 110-ஆக உயர்வு!**

**தீர்மானம் : 8**

திராவிட முன்னேற்றக் கழகம் எனும் நம் பேரியக்கத்தின் இரத்தநாளங்களாக விளங்குபவை மாவட்டக் கழகங்கள். தற்போதுள்ள மாவட்டக் கழகங்களின் எண்ணிக்கை இதுவரை 77 ஆக வைத்துள்ளோம்.

வருவாய் மாவட்டங்களை அடிப்படை அலகாகக் கொண்டு இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு கழக மாவட்டம் என்ற வகையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு பிரித்த பிறகு, ஒரு வருவாய் மாவட்டத்தில் ஒரு சட்டமன்றத் தொகுதி மட்டும் எஞ்சும் நிலை ஏற்பட்டால், அந்தத் தொகுதி அதே வருவாய் மாவட்டத்திற்குட்பட்ட பொருத்தமான கழக மாவட்டத்துடன் மூன்றாவது தொகுதியாக இணைக்கப்பட வேண்டும்.

கழகத்தின் நிர்வாகத்தில் வாய்ப்புகளை விரிவுபடுத்த மாவட்டக் கழகச் செயலாளரின் அதிகபட்ச வயது 70 என நிர்ணயிக்கப்படுகிறது. அதே போல், மாவட்டக் கழகச் செயலாளராகும் ஒருவர் அதிகபட்சமாக மூன்று முறை மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும்.

இதனடிப்படையில், தற்போதுள்ள 77 மாவட்டக் கழகங்கள், 110-ஆக அதிகம் ஆகும். மாவட்டக் கழகங்கள் அதிகரிக்கின்ற காரணத்தால் மாநகரச் செயலாளர்கள் எனும் பொறுப்பின் தேவை எழவில்லை என்பதை இக்கூட்டம் கருத்தில் கொள்கிறது.

அமையவுள்ள இந்த 110 மாவட்டக் கழகங்களில் இடம்பெறவுள்ள தொகுதிகளைக் கழகத் தலைவர் அவர்களே முடிவெடுத்து அறிவிக்க இந்தத் தலைமைச் செயற்குழுக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம்: 9**

கழகத் தலைவர் அவர்கள் புதிதாக அமையவுள்ள 110 மாவட்டக் கழகங்களை அறிவித்தவுடன், அனைத்து மாவட்டக் கழகங்களிலும் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டும். அந்தக் கூட்டத்தில், தலைமைக் கழகத்திலிருந்து கழக மறுசீரமைப்புக் குழுவால் அளிக்கப்படும் வழிகாட்டு நெறிமுறைகளைக் கொண்டு மாவட்டத்தின் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வட்ட - கிளைக் கழக அமைப்புகளை 15 நாட்கள் என்ற காலவரையறைக்குள் உருவாக்க வேண்டும். அதன் பின்னர், தலைமைக் கழகத்தால் அனுப்பப்படும் பிரதிநிதியின் முன்னிலையில், மீண்டும் மாவட்டச் செயற்குழுவைக் கூட்டி, ஒப்புதலைப் பெற்று, இறுதிப் பட்டியலைத் தலைமைக் கழகத்துக்கு விரைந்து அனுப்பி வைக்க வேண்டும் என இந்தத் தலைமைச் செயற்குழுக் கேட்டுக் கொள்கிறது.

அதோடு, மேற்சொன்ன தீர்மானங்கள் அனைத்தையும் நிறைவேற்றித் தந்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

## மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தை 15 நாட்களில் கூட்டிட வேண்டும்!

**கழகத் தலைவர் அவர்கள் புதிதாக அமையவுள்ள 110 மாவட்டக் கழகங்களை அறிவித்தவுடன், அனைத்து மாவட்டக் கழகங்களிலும் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டும். அந்தக் கூட்டத்தில், தலைமைக் கழகத்திலிருந்து கழக மறுசீரமைப்புக் குழுவால் அளிக்கப்படும் வழிகாட்டு நெறிமுறைகளைக் கொண்டு மாவட்டத்தின் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வட்ட - கிளைக் கழக அமைப்புகளை 15 நாட்கள் என்ற காலவரையறைக்குள் உருவாக்க வேண்டும். அதன் பின்னர், தலைமைக் கழகத்தால் அனுப்பப்படும் பிரதிநிதியின் முன்னிலையில், மீண்டும் மாவட்டச் செயற்குழுவைக் கூட்டி, ஒப்புதலைப் பெற்று, இறுதிப் பட்டியலைத் தலைமைக் கழகத்துக்கு விரைந்து அனுப்பி வைக்க வேண்டும் என இந்தத் தலைமைச் செயற்குழுக் கேட்டுக் கொள்கிறது.**

# 14 பல்கலை கழகங்களில் துணைவேந்தர் பதவி காலி!

## உயர்கல்வி செயலாளர் பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவு!

*மதுரை, ஆக. 24 -*

தமிழகத்தில் 14 பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் பதவிகள் காலியாக இருப்பது தொடர்பாக உயர்கல்வி முதன்மைச் செயலாளர் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக பொறுப்பு பதிவாளர் எஸ்.முத்தையாவை பதவிநீக்கம் செய்யக்கோரி ஜோசப் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுத் தாக்கல் செய்தார். மனுவை நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார். பொறுப்பு பதிவாளர் தரப்பில், தற்காலிக அடிப்படையில் பொறுப்பு பதிவாளர் பதவியை வகிக்கிறேன். அப்பதவிக்கு தேவையான அனைத்து தகுதிகளும் உள்ளன. நிரந்தர பதிவாளர் நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என கூறப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின்போது தமிழகத்தில் 14 பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் இல்லை என்பதும், பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் தற்போது பொறுப்பு பதிவாளர்கள் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருவதும் அனைத்து முடிவுகளும் கன்வீனர் கமிட்டி மூலமாகவே எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டன.

இதையடுத்து நீதிபதி, இந்த மனுவை விசாரிக்க நீதிமன்றம் விரும்பவில்லை. இருப்பினும் 14 பல்கலைக்கழகங்களில் பல ஆண்டுகளாக துணைவேந்தர் இல்லாத நிலை தொடர்பாக உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளரிடமிருந்து அறிக்கை பெற நீதிமன்றம் விரும்புகிறது.

துணைவேந்தர் பதவிகளை நிரப்ப எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் உயர் கல்வித்துறை முதன்மைச் செயலரிடமிருந்து உரிய விளக்கம் பெற்று தெரிவிக்க அரசு தலைமை வழக்கறிஞருக்கு உத்தரவிட்டு விசாரணையை 3 வாரங்களுக்கு தள்ளிவைக்கப்படுவதாக நீதிபதி உத்தரவிட்டார்.